அங்கே குறைந்தழுத்த மின்சாரம், low voltage மின்சாரம் வந்துகொண்டிருக்கின்றது. அங்கே ஒரு தானியங்கி மின்மாற்றி (auto switch) அமைத்து, ஒரு மின் வாரிய துணைப் பொறியாளர் அலுவலகமும் அமைத்துத் தர வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டத்தில் 16 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. அதில் கும்மிடிப்பூண்டி தொகுதியிலும் ஒரு துணை மின் நிலையம் அமையவிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்ற வினாவின் அடிப்படையில் வாரியத்தின் சார்பாக ஆய்வு செய்யப்பட்டு, தேவையின் அடிப்படையில் அதற்கான பணிகளை மேற்கொள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 198, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராசேந்திரன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

198—

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம்

***15512—திரு. சபா. இராசேந்திரன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதியில் உள்ள ஒவ்வொரு வருவாய்க் கிராமத்திலும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2022 ஏப்ரல் 28]

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதியில் உள்ள ஒவ்வொரு வருவாய்க் கிராமத்திலும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்க சாத்தியக்கூறுகள் இருப்பின், சங்கம் பதிவு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராசேந்திரன் அவர்கள்.*

திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தியக்கூறுகள் இருந்தால் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்படும் என்று அறிவித்திருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

நெய்வேலி தொகுதியில் இருக்கின்ற கிராமப்புறப் பகுதிகளில் நிறைய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. அந்த சாத்தியக்கூறுகளை அரசுத் துறையின் சார்பில் பலப்படுத்த வேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோள். பலப்படுத்த வேண்டுமென்று சொன்னால், அங்கேயிருக்கிற விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், பால் உற்பத்தியாளர்கள், மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஆகியவற்றிற்கு எல்லாம் வங்கிகள்மூலம் கறவை மாடுகளைப் பெற்றுத் தர வேண்டிய வேலையை ஒருங்கிணைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

ஏனென்றால், மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற பிறகு, பால் கொள்முதல் விலையை அவர்களுக்கு வழங்குகின்ற வேலையை சங்கங்களுக்கு கொடுத்துக் கொண்டிருந்ததை மாற்றி தனி நபருடைய வங்கிக் கணக்கில் செலுத்துகின்ற நடைமுறையைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். எனவே, வங்கிகள் அந்தக் கடனைத் திரும்பப் பெறுவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்தக்கூடிய இந்தப் பால் உற்பத்தியாளர்களை நமது துறையின் சார்பில் ஒருங்கிணைத்து, Chilling Plant *போன்றவை அமைத்துக் கொடுத்து, அவர்களை ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துறையின்மூலம் இதனை செய்து தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.*

[*2022 ஏப்ரல் 28*

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த விழுப்புரம்–கடலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்திலிருந்து பிரிந்து, புதியதாக கடலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் செயல்பட்டு வருகிறது. தற்போது இந்த ஒன்றியத்தில் சராசரியாக 43,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. நெய்வேலி தொகுதிக்குட்பட்ட 29 வருவாய்க் கிராமங்களில் மொத்தம் 11 தொடக்க பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இதில், 4 தொடக்க பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக நாளொன்றுக்கு சுமார் 550 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு, அருகிலுள்ள மாளிகைமேடு தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையத்திற்கு அனுப்பப்படுகிறது. ஒரு சங்கம் செயலிழந்த நிலையிலும், மற்ற 6 சங்கங்கள் கலைத்த நிலையிலும் உள்ளன. தற்போது, நெய்வேலி தொகுதிக்குட்பட்ட வருவாய்க் கிராமத்தில் பால் உற்பத்தியாளர் சங்கம் பதிவு செய்யவோ அல்லது செயலிழந்த சங்கங்களைப் புதுப்பிக்கவோ விண்ணப்பிக்கும் நேர்வில், அவை பரிசீலனை செய்யப்பட்டு, கள ஆய்வு மேற்கொண்டு, சாத்தியக்கூறுகள் இருப்பின் நெய்வேலி தொகுதிக்குட்பட்ட அனைத்து வருவாய்க் கிராமங்களிலும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராசேந்திரன் அவர்கள்.

திரு. சபா. இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கழக இளைஞரணியிலிருந்து தலைவர் அவர்களால் உருவாக்கப்பட்டவர். வித்தியாசமாக சிந்திக்கக்கூடியவர். எனவே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கேள்விக்கு வாருங்கள்.

2022 ஏப்ரல் 28]

திரு. சபா. இராசேந்திரன்: எனது நெய்வேலி தொகுதியை ஒரு model தொகுதியாக எடுத்துக்கொண்டு, அங்கிருக்கின்ற இரண்டு ஒன்றியங்களான, பண்ருட்டி மற்றும் குறிஞ்சிப்பாடி ஒன்றியங்களிலுள்ள விவசாயிகளுக்கு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தின் சார்பில் ரூ.30 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்று சொல்லியிருக்கின்ற அந்தப் பால் பண்ணையை, நெய்வேலி சட்டமன்றத் தொகுதியில் அமைத்துக் கொடுத்தால் அங்கிருக்கின்ற விவசாயிகள் மற்றும் கிராமப் பொருளாதாரம் மேம்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நெய்வேலியில் அமைத்துத் தருவார்களா என்று கேட்கிறீர்கள், அப்படித்தானே!

திரு. சபா. இராசேந்திரன்: அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் ஏறக்குறைய 9,385–க்கும் மேற்பட்ட சங்கங்கள் இருக்கின்றன. ஏறக்குறைய 2,500–க்கும் மேற்பட்ட செயலிழந்த சங்கங்கள் இருக்கின்றன. அவற்றையும் புதுப்பிப்பதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கின்றோம். ஆகவே, நமக்கு வரக்கூடிய பால் வரத்து ஏறக்குறைய 38 இலட்சம் லிட்டராக இருந்தாலும், நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அதிகரித்து, தற்பொழுது 41 இலட்சம் லிட்டரை எட்டியிருக்கிறது. இருந்தாலும், தற்போது lean season என்ற காரணத்தால் பால் வரத்து சற்று குறைந்திருக்கிறது. கடந்த ஒரு வார காலமாக ஏறத்தாழ 38 இலட்சம் லிட்டராகக் குறைந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அவருடைய தொகுதிக்கென்று சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்துபேசி, அவருடைய விருப்பத்திற்கிணங்க செய்து தரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 199, மாண்புமிகு உறுப்பினர் திரு. சீ. கதிரவன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.